## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 316/2022
## வழக்கு சாட்சி PW-7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெகுராஜன் | தாலுகா | : | அகஸ்தீஸ்வரம் |
| தந்தை பெயர் | : | தியாகராஜன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | அளத்தங்கரை | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம், மேலச்சேவல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் அச்சன்புதூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 04.08.2017 ம் தேதி, காலை நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஷேக்பாசல்குசைன், திரு.இராஜேந்திரன், காவலர் திரு.பெருமாள் சகிதம் நானும் சேர்ந்து அச்சன்புதூர் – காசிதர்மம் ரோட்டில் சின்னக்காட்டிற்கு செல்லும் விலக்கில் ரோந்து செய்து வரும்போது, மேற்படி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக TN-76-M-1473 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover மோட்டார் சைக்கிளை பின்னர் ஊர், பெயர், விலாசம் தெரிந்து கொண்ட முருகையாத்தேவர் மகன் பிச்சைக்கனி என்பவர் ஓட்டிக்கொண்டும், அவருக்கு பின்னால் அச்சன்புதூர் வடக்கு அம்மன்கோவில் தெரு லிங்கத்துரை மகன் மதிச்செல்வம் என்பவர் ஒரு சாக்கு பையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டும், அவருக்கு

பின்னால் மேலக்கடையநல்லூர் மலம்பேட்டை ரோடு இராமையாத்தேவர் மகன் பால்பாண்டி உட்கார்ந்து கொண்டும், மற்றொரு TN–76–Q–7106 TVS Bonix மோட்டார் சைக்கிளை மேலக்கடையநல்லூர் மலம்பேட்டை ரோடு இராமையாத்தேவர் மகன் சங்கரபாண்டி ஓட்டிக்கொண்டும், அவருக்கு பின்னால் அச்சன்புதூர் பண்ணை வீட்டு தெரு தவசிக்கண்ணு மகன் சங்கர் என்பவர் உட்கார்ந்து கொண்டும், அவருக்கு பின்னால் அச்சன்புதூர் தங்கமுத்தம்மன் கோவில் தெரு மாரித்துரை மகன் இசக்கித்துரை என்பவரும் உட்கார்ந்து கொண்டும் வந்தவர்கள் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் திரும்பி செல்ல முயன்றவரை மடக்கி பிடித்தபோது மேற்படி நபர்களில் பிச்சைக்கனி ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளுடன் பிச்சைக்கனி, மதிச்செல்வம், பால்பாண்டி ஆகியோர்களை பிடித்தும், சந்தனபாண்டி ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளை பிடிக்கும் போது மேற்படி மோட்டார் சைக்களில் 3 வதாக இருந்த இசக்கித்துரையை பிடிக்கவும், சந்தனபாண்டி தான் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த சங்கர் என்பவருடன் கிழக்கு பார்த்து மோட்டார் சைக்கிளை திருப்பி சென்று விட்டார். மற்ற 4 நபர்களை பிடித்து அவர்களில் மதிச்செல்வம் வைத்திருந்த மேற்படி சாக்குப்பையை சோதனை செய்தபோது அதில் ஒரு SBBL துப்பாக்கி இருந்தது.

மேற்டி துப்பாக்கி பற்றி விசாரித்தபோது அரசு அனுமதி இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்த விபரம் தெரிந்து, மேற்படி 4 நபர்களையும் காலை 04.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும், மேலும் அந்த வழியாக வந்த சாட்சிகள் மீரான்கனி, மாடசாமி ஆகியோர் முன்பு எதிரி மதிச்செல்வம் என்பவரை விசாரித்தபோது எதிரி மதிச்செல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி

எதிரி மதிச்செல்வம் என்பவர் காலை 07.30 மணிக்கு ஆஜர் செய்த SBBL துப்பாக்கி ஒன்று மற்றும் 08.15 மணிக்கு எதிரி பிச்சைக்கனி என்பவர் ஆஜர் செய்த TN–76–M–1473 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் SBBL துப்பாக்கி தோட்டா ஒன்று ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். TN–76–M–1473 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover மோட்டார் சைக்கிள் ஒன்று – அ.சா.பொ.1 ஆகும்.

மேலும், 07.45 மணிக்கு எதிரி பால்பாண்டி என்பவர் ஆஜர் செய்த SBBL துப்பாக்கி தோட்டா ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதன் பின்னர் எதிரி இசக்கித்துரை என்பவரிடமிருந்து SBBL துப்பாக்கி தோட்டா ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

பின்னர் எதிரிகள் மற்றும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் சகிதம் 09.00 மணிக்கு அச்சன்புதூர் காவல்நிலையம் சென்று எதிரிகள் மீது அச்சன்புதூர் காவல்நிலைய குற்ற எண்.209/2015, சட்டப்பிரிவுகள் 25(1)(A) Indian Arms Act and Sec 3, 4 Explosive Substance Act–ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.

பின்னர் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முருகன், கோபால் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.9** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் சாட்சிகள் ஷேக்பாசில்குசைன், ராஜேந்திரன்,

பெருமாள், முருகன், கோபால், மீரான்கனி, மாடசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 06.08.2015 ம் தேதி, 14.00 மணிக்கு எதிரி சந்தனப்பாண்டி என்பவரை அச்சன்புதூர் – சிவராமபேட்டை ரோட்டிலுள்ள அனுமன்நதி பாலத்திற்கு பக்கத்தில் வைத்து கைது செய்து சாட்சிகள் முத்தையா நாடார், அப்துல்மஜித் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மதிச்செல்வம் என்னிடமும், சங்கரிடமும் கொடுத்து வைத்திருந்த 2 தோட்டாக்களை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11 ஆகும்.**

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 15.00 மணியளவில் அதே இடத்தில் வைத்து SBBL துப்பாக்கி தோட்டா ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.12** ஆகும். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு, எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து, நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவங்கள் 91 **அ.சா.ஆ.13, 14, 15, 16, 17** ஆகும்.

19.05.2016 ம் தேதி, வழக்கில் கைப்பற்றப்பட்ட தோட்டாக்களையும், துப்பாக்கிகளையும் ஆய்வு செய்ய வேண்டி நீதிமன்றம் மூலமாக சென்னை

வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். SBBL துப்பாக்கி தோட்டா 5 எண்ணிக்கை – அ.சா.பொ.2 வரிசை ஆகும். SBBL துப்பாக்கி ஒன்று – அ.சா.பொ.3 ஆகும். இத்துடன் நான் பணிமாறுதலாகி சென்று விட்டதால், வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன்.

<u>3, 4, 5, 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

04.08.2015 அதிகாலை 06.00 மணிக்கு முன்பு வேறு எந்தெந்த பகுதிகளில் நாங்கள் ரோந்து செய்தோம் என்றால் அச்சன்புதூர் – காசிதர்மம் ரோட்டில் தான் ரோந்து செய்தோம். அது எந்தெந்த பகுதிகள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் சம்பவயிடத்தில் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 5 அத்தாட்சிகளும் முதல்தகவல்அறிக்கைக்கு முன்னர் தயார் செய்யப்பட்டது என்றால் 4 அத்தாட்சிகள் தயார் செய்யப்பட்டது.

4 அத்தாட்சிகளும் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் முதல்தகவல்அறிக்கை எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த எதிரிகளை எந்த போலீசார் பிடித்தார்கள் என்று குறிப்பிட்டு வழக்கு கோப்பில் துலங்காது. எதிரிகள் எவ்வளவு தூரத்தில் எங்களை பார்த்து ஓட முயற்சித்தார்கள் என்று வழக்கு கோப்பில் துலங்காது. கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளின் பதிவு பெற்ற உரிமையாளர் யார் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. முத்துராஜ் அல்லது அவரது குடும்பத்தாரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. முத்துராஜ் சம்பவத்திற்கு முன்பே இறந்து விட்டார்.

நான் சொல்வது போல் சம்பவநாளில் எந்த ரோந்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் நிலைய உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக புகார் தயாரித்து வழக்கில் ஈடுபடாத எதிரிகளை வேண்டுமென்றே வழக்கில் சேர்த்து முதல்தகவல்அறிக்கை பொய்யாக பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியலல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை சம்பவநாள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய விசாரணையில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நான் தடய அறிவியல் துறைக்கு அனுப்பியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(3, 4, 5, 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:52:16 +0530